# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKRAN DATED 17.04.2025

புதுவை பல்கலை சமுதாய கல்லூரியில்

## அம்பேத்கர் பிறந்த நாள் விழா



புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா நடந்தது.

புதுச்சேரி, ஏப். 17: புதுவை பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியின் தேசிய சேவை திட்டம் (என்எஸ்எஸ்) சார்பில் இந்திய அரசியலமைப்பின் தலைமை சிற்பியும், சமூகநீதியின் வீரருமான அம்பேத்கரின் 134வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. சமுதாயக் கல்லூரியின் முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் தலைமை உரையை நிகழ்த்தினார். பல்கலைக்கழக நூலகர் விஜயகுமார் சிறப்புரையாற்றினார். அம்பேத்கரின் அறிவுசார் மரபு மற்றும் அறிவு, சட்டம் மற்றும் சீர்திருத்தம் மூலம் நவீன இந்தியாவை வடிவமைப்பதில் அவரது முக்கிய பங்கை வலியுறுத்தினார்.

நிகழ்ச்சியை தேசிய சேவைத் திட்ட அதிகாரி சுரேஷ்குமார் ஒருங்கிணைத்தார். ஆசிரியர்கள், நிர்வாக பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக, அம்பேத்கரின் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.